# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 180/மா/2017**

**ஆணை எண். 15/2018**

**நாள் : 24/01/2018**

**செல்வி பி. ரம்யா,**
**தண்டலை,**
**திருவாரூர் மாவட்டம்.**

– **முறையீட்டு மனுதாரர்**

**மாநகராட்சி ஆணையர்,**
**திண்டுக்கல் மாநகராட்சி,**
**திண்டுக்கல்.**

– **எதிர் மனுதாரர்**

திண்டுக்கல் மாநகராட்சி, நெட்டுத் தெரு, 134, முனிசிபல் காலனி முகவரியைச் சேர்ந்த காலம் சென்ற திரு பழனி மற்றும் திருமதி ப.வீரம்மாள் ஆகியோரின் மகள் செல்வி கிருஷ்ணன் (எ) ரம்யா என்பவர் மூன்றாம் பாலினத்தவர். இவர் தற்பொழுது திருவாரூர் மாவட்டம், தண்டலை, தியாகபுரம், எண்.2/174/2, திருநங்கையர் காலனியில் வசித்து வருகிறார். இவரது 13.09.2017 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 15.09.2017 அன்று பெறப்பட்டு, 180/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. திண்டுக்கல் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் 11.01.2018 அன்று விசாரணையின்போது மனுதாரர் அளித்த வாக்குமூலம் பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

திண்டுக்கல் மாநகராட்சியில் துப்புரவுப் பணியாளராகப் பணியாற்றி வயது மூப்பின் காரணமாக ஓய்வு பெற்ற தனது தாயார் திருமதி ப. வீரம்மாள் அவர்கள் ஓய்வூதியம் பெற்று வந்த நிலையில் காலமாகிவிட்டார் என்றும், 28.11.2011–ஆம் நாளிட்ட நிதித்துறை அரசாணை எண்.325–இன் படி மணமாகாத தனக்கு குடும்ப ஓய்வூதியம் வழங்கிட ஆணையிடக்கோரி திண்டுக்கல் மாநகராட்சி, திருவாரூர் மாவட்டம், தண்டலை, தியாகபுரம், எண்.2/174/2, திருநங்கையர் காலனியில் வசித்து வரும் செல்வி கிருஷ்ணன் (எ) ரம்யா என்பவர் இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் தனது 02.01.2018 அறிவிப்பு அறிவிக்கையில் முறையீட்டு மனுதாரர் சமர்ப்பித்த ஆவணங்களில் சில குறைபாடுகள் கண்டறியப் பட்டுள்ளனவென்றும், குறிப்பிட்ட அக்குறை பாடுகளைக் களைந்தும், குறைபாடுக்குரிய காரணத்தினை விளக்கி மேற்குறிப்பிட்ட அறிவிப்பு கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் மீள சமர்பித்திடுமாறு மனுதாரர் அறிவுறுத்தப்பட்டுள்ளார் எனத் தெரிவித்துள்ளார்.

3. முறையீட்டு மனுதாரரிடம் 11.01.2018 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது. தனது பெற்றோர்களின் வாரிசுகளில் தான் ஒருவர் மட்டுமே திருமணம் ஆகாத நிலையில் உள்ளதாகவும், தாயரின் மறைவுக்குப்பின் தனக்கு குடும்ப ஒய்வூதியம் வழங்கப்படவில்லையென விசாரணையின் போது முறையீட்டு மனுதாரர் தெரிவித்தார். பாதுகாப்புக் கருதி தற்பொழுது திருவாரூர் மாவட்டத்தில் தான் குடியிருப்பதாகவும் தனக்கு குடும்ப ஒய்வூதியத்துடன் நிலுவைத் தொகையையும் வழங்கிடக் கோரி உரிய ஆவணங்கள் மற்றும் சான்றிதழ்களை மனுதாரர் விசாரணையின் போது சமர்ப்பித்தார்.

4. ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதிய தாரர்கள் 25 வயதைக் கடந்த திருமணமாகாத / விதவை / விவாகரத்து பெற்ற மகள் ஆகியோருக்கு , 28.11.2011–ஆம் நாளிட்ட நிதித்துறை அரசாணை எண்.325–இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைக்களுக்குட்பட்டு குடும்ப ஒய்வூதியம் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. முறையீட்டு மனுதாரர் 43 அகவையிதனை எய்திய திருநங்கை என திருமண நிலை குறித்து திண்டுக்கல் கிழக்கு வட்டாட்சியர் சான்று அளித்துள்ளார் முறையீட்டு மனுதாரரின் உடன் பிறந்த சகோதர சகோதரிகள் மணமானவர்கள் என திருமண நிலை குறித்தும் சான்றளித்துள்ளார். மேலும், மனுதாரருக்கு மூன்றாம் பாலினத்தவருக்கான அறுவை சிகிச்சையும் 12.07.2010 அன்று மேற்கொள்ளப் பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட அறுவை சிகிச்சைக்குப் பின் மனுதாரர் தன்னை P. ரம்யா என்றழைக்கப்படவேண்டுமென 02.05.2012 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழிலும் அறிவிக்கை செய்துள்ளார். 28.11.2011 நாளிட்ட நிதித்துறை அரசாணை எண்.325–இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு மனுதாரருக்கு குடும்ப ஒய்வூதியம் வழங்க பரிசீலிக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. மனுதாரரின் தாயார் காலமாகி நான்கு ஆண்டுகள் நிறைவடையும் நிலையில் உள்ளன. எனவே, மேலும் காலம் தாழ்த்தாமல், உரிய ஆவணங்களை முறையீட்டு மனுதாரரிடமிருந்து பெற்று, குடும்ப ஒய்வூதியம் வழங்கப்படுவதற்கான கருத்துருவினை உடன் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறைக்கு அனுப்புமாறு திண்டுக்கல் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும், இது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைக் குறித்த அறிக்கையினை 30 நாட்களுக்குள் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்கும்படியும் ஆணையிடப்படுகிறது.

**2018– ஆம் ஆண்டு, சனவரி திங்கள், 24–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு,** அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

29.1.18

30/1/18

பெறுநர்

1. மாநகராட்சி ஆணையாளர்,
திண்டுக்கல் மாநகராட்சி,
திண்டுக்கல்.

2. P. ரம்யா,
134, முனிசிபல் காலனி,
நெட்டுத் தெரு, திண்டுக்கல்.

3. இயக்குநர்,
உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை,
ஒருங்கிணைந்த நிதித் துறை வளாகம்,
நந்தனம், சென்னை.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி